மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.12.2025) கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டு அம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, நலம் விசாரித்து, அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் அம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவு, ஆய்வகம், உள் மருத்துவ பயனாளிகள் பிரிவு, வெளி மருத்துவ பயனாளிகள் பிரிவு, மருந்தகம், சித்த மருத்துவப் பிரிவு போன்ற மருத்துவ கட்டமைப்பு வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், பிரபாகர் ராஜா மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

உச்சநீதிமன்றம் முதல் மாவட்ட நீதிமன்றங்கள் வரை

தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து விசாரிக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி!

புதுடெல்லி, டிச.6- தகவல் தொழிநுட்பங்களைப் பயன்படுத்துவது முதல் எத்தனையோ முயற்சிகள் செய்தபிறகும் கூட உச்ச நீதிமன்றத்தில் ஏராளமான வழக்குகள் தேங்கியிருப்பது ஏன்? அவற்றை விரைந்து தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய சட்டத்துறை இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு:-

வழக்குகளைத் தீர்த்து வைப்பது என்பது முழுக்க முழுக்க நீதித்துறை சார்ந்த விஷயம். உண்மையை கண்டறிவதில் உள்ள சிக்கல், சாட்சியங்களின், ஆதாரங்களின் தன்மை, வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்கள், சாட்சிகள் மற்றும் வழக்கறிஞர்களின் ஒத்துழைப்பு, விசாரணை அமைப்புகளின் விசாரணை வேகம் என பல விஷயங்கள் நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்கியிருக்க காரணமாக இருக்கின்றன. இதுதவிர, நீதிமன்ற கட்டட வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்புத் தேவைகளும் போதுமான ஊழியர்கள் இல்லாததும் ஒரு காரணமாக இருக்கிறது.

தேசிய நீதித்துறை புள்ளி விவரங்களை சேகரிக்கும் அமைப்பின் தகவல்படி, 2025, டிசம்பர் முதல் தேதி நிலவரப்படி உச்சநீதி மன்றத்தின் மூன்று நீதிபதிகள் அமர்வில் 212 வழக்குகள், ஐந்து நீதிபதிகள் அமர்வில் 25 ; ஏழு நீதிபதிகள் அமர்வில் 6 ; ஒன்பது நீதிபதிகள் அமர்வில் 4 வழக்குகள் என மொத்தம் 247 வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அரசமைப்புச் சட்டம் பிரிவு 21 வலியுறுத்தியுள்ளபடி, வழக்குகளை விரைந்து முடிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

இதன் ஒரு கட்டமாக , 2011 ஆகஸ்ட் மாதத்தில் நீதி வழங்கல் மற்றும் சட்டச் சீர்திருத்தத்துக்கான தேசியத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இதன்மூலம், வழக்குகள் தேக்கமாவதைத் தவிர்க்கவும்; அதற்கென உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, நீதி பரிபாலனையின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் உள்ள மாவட்ட மற்றும் கீழ் கோர்ட்டுகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை வலுப்படுத்த 1993ம் ஆண்டு முதல் இது வரை 12,358 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 2014ம் ஆண்டில் 15,818 நீதிமன்ற அறைகள் என்று இருந்த எண்ணிக்கை 2025ல் 22,602 என்று உயர்ந்துள்ளது. நீதிபதிக ளுக்கான குடியிருப்புகளின் எண்ணிக்கையும் 10,211 ல் இருந்து 20,008 ஆக உயர்ந்துள்ளது.

இகோர்ட் திட்டத்தின் கீழ் விரைவான நீதி வழங்கும் வகையில், உயர்நீதி மன்றங்களிலும், மாவட்ட நீதிமன்றங்களிலும் 579 கோடி பக்க ஆவணங்கள் டிஜிட்டல் மயமாக்கப்படுள்ளது. 3.81 கோடி வழக்குகளில் வீடியோ கான்பரன்ஸ் மூலமாக விசாரணை நடத்தப்பட்டுள்ளது. 11 உயர்நீதிமன்றங்களில் நேரடி ஒளிபரப்பு மூலம் விசாரணைகளைப் பார்வையிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றப் பணிகளை மேற்கொள்வதற்கென உள்ள இசேவை மையங்களின் எண்ணிக்கை 1,987 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர்நீமன்றங்கள் மற்றும் உச்சநீதி மன்றத்தில் நீதிபதிகள் பணிகளை உரிய நேரத்தில் நிரப்பவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உயர்நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 2014ல் 906 ஆக இருந்தது, 2025ல் 1,122 ஆக உயர்ந்துள்ளது.

2014 முதல் 2025ம் ஆண்டு வரை 72 உச்சநீதிமன்ற நீதிபதிகளும், 1,156 உயர்நீதிமன்ற நீதிபதிகளும் நியமிக்கப் பட்டுள்ளனர். உயர்நீதிமன்றங்களில் 819 கூடுதல் நீதிபதிகள் நிரந்தர நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். கீழ் கோர்ட்டுகளில் நீதிபதிகள் நியமந விவகாரம் மாநில அரசுகள் சம்பந்தப்பட்டது.

அனைத்து உயர்நீதிமன்றங்களிலும், மாவட்ட நீதிமன்றங்களிலும் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் வழக்குகளை விரைந்து முடிக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கடுமையான குற்றங்கள் மற்றும் முதியோர், பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க விரைவு நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 773 விரைவு நீதிமன்றங்களில் 400 நீதிமன்றங்கள் போக்ஸோ வழக்குகளுக்கென தனியாக அமைக்கப்பட்டுள்ளது. எம்.பி., எம்.எல்.ஏ. க்கள் மீதான வழக்குகளை விசாரிக்க ஒன்பது மாநிலங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி, வழக்குகளை விரைந்து விசாரித்து முடிவெடுக்கத் தேவையான சட்டத்திருத்தங்களையும் ஒன்றிய அரசு அவ்வப்போது செய்து வருகிறது. சாதாரண பொதுமக்கள் விரைவான நீதி பெறுவதில் லோக் அதாலத் மிக முக்கிய பங்கை வகிக்கிறது. அப்பீலுக்கு வழியில்லாமல் சிவில் வழக்குகளை இறுதியாக முடிவெடுத்து தீர்ப்பு வழங்குவதில் லோக் அதாலத் மிகவும் உதவிகரமாக இருக்கிறது. தாலுகா மற்றும் மாவட்ட அளவில் முன்பே நிர்ணயிக்கப்பட்ட தேதியில் ஒரே நாளில் லோக் அதாலத் செயல்படுகிறது.

இவ்வாறு அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பதிலளித்தார்.

பிரதம மந்திரி ராஷ்டிரிய கிரிஸி விகாஸ் திட்டம்,

தமிழ்நாட்டில் முறையாக செயல்படுத்தப்படுகிறதா?

மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி

புதுடெல்லி, டிச.6- திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 02 டிசம்பர் 2025 அன்று மக்களவையில், பிரதம மந்திரி ராஷ்டிரிய கிரிஸி விகாஸ் திட்டம், தமிழ் நாட்டில் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்றும், சொட்டு நீர் பாசனம், விவசாய காடுகள் வளர்ப்பு, மண் வளம் பாதுகாப்பு ஆகியவற்றில் ஒன்றிய அரசு கவனம் செலுத்துகிறதா?என்றும் கடந்த மூன்று நிதியாண்டுகளில் தமிழ் நாட்டில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? என்றும், புத்தாக்க நிறுவனங்களுக்கு, விவசாயத் துறையில் உரிய பங்களிப்பு வழங்கப்படுகிறதா? என்றும், ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விவசாயத் துறை அமைச்சர்அவர்கள் அளித்த பதில் வருமாறு:

பிரதம மந்திரி ராஷ்டிரிய கிரிஸி விகாஸ் திட்டத்தின் கீழ், கடந்த மூன்று நிதியாண்டுகளில் இந்தியா முழுமைக்கும் ரூபாய் 15,397 கோடிகள் அளவிற்கு செலவிடப்பட்டுள்ளது என்றும், தமிழ் நாட்டிற்கு மட்டும் ரூபாய் 1659 கோடிகள் செவிடப்பட்டுள்ளது என்றும், காஞ்சிபுரம், ராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் இத்திட்டம் வெகு சிறப்பாக செயல்பட்டுவருகிறது என்றும், இத்திட்டம் முறையாக செயல்படுகிறதா? என்பதை கண்காணிக்கும் வகையில் நீத்தி ஆலோக் குழுவினர் முறையாக ஆய்வு செய்து வருகின்றனர் என்றும், வருடாந்திர செயல் திட்டத்தின் படி, 31 டிசம்பர்க்குள் பெறப்படும் திட்டங்களுக்கு ஏப்ரல் முதல் வாரத்திற்கு முன்பாகவே நிதி வழங்கப்படுகிறது என்றும், இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாட்டிற்கென 202526ம் நிதியாண்டில் இதுவரை ரூபாய் 588 கோடிகள் நிதி வழங்கப்பட்டுள்ளது என்றும், காஞ்சிபுரம், ராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் 82561 மண் வளப் பாதுகாப்பு அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும்,

இந்த மூன்று மாவட்டங்களில் இதுவரை1,13,166 ஹெக்டேரில் சொட்டு நீர் பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும், 14 நர்சரிகளில் 2,60,000 தரமான மரக் கண்கள் விவசாயிகளுக்கு வழங்கதிட்டமிடப்பட்டுள்ளது என்றும், புத்தாக்க நிறுவனங்களுக்கு 25 இலட்சம் வரை நிதியுதவி செய்யப்படும் என்றும் ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம் நாத் தாக்கூர் அவர்கள் மக்களவையில், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் இன்று (06.12.2025- சனிக்கிழமை) மாலை 05.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொருள்: 1. 14.12.2025 அன்று திருவண்ணாமலையில் கழகத் தலைவர் பங்கேற்கும் வடக்கு மண்டல இளைஞர் அணி மாநாட்டில் பங்கேற்பது.

2. SIR இறுதிக் கட்டப் பணிகள்

3. கழக ஆக்கப்பணிகள்.

ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

டி.மோகன்தாஸ் தலைமை! சித்தாமூர் ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு

ஜெ.சங்கர் தாயார் ஜெ. நவநீதம் திருவுருவப்படம்!

அப்துல் மாலிக் - பனையூர் மு. பாபு எம்.எல்.ஏ. திறந்து வைத்து அஞ்சலி!

காஞ்சிபுரம், டிச.6- இடைக்கழிநாடு மேனாள் பேரூர் துணை செயலாளர் - சித்தாமூர் ஒன்றிய ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் ஜெ. சங்கர் தாயார் திருமதி ஜெ. நவநீதம் படத்திறப்பு விழா 03.12.2025 அன்று மாலை 6.00 மணியளவில் செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி, வார்டு12 கடப்பாக்கம் கிளையில் நடைபெற்றது. பேரூர் செயலாளர் டி மோகன்தாஸ் தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக் மற்றும் செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு. பாபு ஆகியோர் அன்னாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தனர்.

இதில் காஞ்சி தெற்கு மாவட்ட அவைத்தலைவர் ச.இனியரசு, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் ஆர். தசரதன், இலத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பாபு, மாவட்ட மீனவராணி அமைப்பாளர் ஏ.என். பாரத், முன்னாள் மாவட்ட பிரதிநிதி டி. தட்சணாமூர்த்தி, நல்லூர் முன்னாள் கிளை செயலாளர் என். ஆர். சக்திவேல், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் தேசமுத்து,பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொறியாளர் பெ. பிரபு (எ) ஜெயலட்சுமணன், எம். நாகூர் மீரான், ஏ மணிவண்ணன், மோனிஷா சகாதேவன், முன்னாள் பேரூர் அவைத்தலைவர் காஜா மொய்தீன், துரைராஜ் , வார்டு செயலாளர்கள் சிறுபான்மை அணி மாவட்ட துணை அமைப்பாளர் பஷீர், டி. சந்திரன், தொழிலாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர், பேரூர் சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் அப்துல் ரகுமான், மெடிக்கல் இ. ரவி, ஆற்காடு ஊராட்சி மன்ற தலைவர் ராஜசேகர், வி.சி.கே. மேனாள் மாவட்ட செயலாளர் சு.க. ஆதவன், மாவட்ட செயலாளர் காஞ்சி மு. தமிழினி, பேரூர் செயலாளர் பெ.அகிலன்,சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கே.ஜெயக்குமார், இளைஞரணி பேரூர் அமைப்பாளர் ரிப்பாய்,

தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் டி. அருள்நிதி, இளைஞரணி வாயலூர் மதன், ஒன்றிய துணை செயலாளர் எஸ். அர்ச்சுனன், கப்பிவாக்கம் முன்னாள் கிளை செயலாளர் கே. பெரியாண்டவன் , CRPF வி. மோகன் JIPMER , திருப்போரூர் இளைஞரணி கௌரி சங்கர், வழக்கறிஞர் சுரேஷ், வி.பால்ராஜ், டி. மோகன்ராஜ், வி.சி.கே. இலத்தூர் ஒன்றிய செயலாளர் மேகநாதன், பனையூர் தமிழரசன், கோட்டைக்காடு புருசோத்தமன், சிலம்பு, முத்தையா, சிறுத்தை வேலு, பிரபு, சீனு,

வார்டு 12 கிளை கழக நிர்வாகிகள் பி. திருமலை, ஆர். வெங்கடேசன், பி. பிரகாஷ், பி.ரங்கநாதன், எஸ். சீனு , ஜெ.எஸ். நிவேதராஜ் உள்ளிட்ட பேரூர் துணை செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள், ஒன்றிய, பேரூர், இளைஞர் அணி பொறுப்பாளர்கள், மன்ற உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இடைக்கழிநாடு மேனாள் பேரூர் துணை செயலாளர் – சித்தாமூர் ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் – முன்னாள் கவுன்சிலர் ஜெ. சங்கர் தாயார் திருமதி ஜெ. நவநீதம் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி, வார்டு12 கடப்பாக்கம் கிளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்றது. பேரூர் செயலாளர் டி. மோகன்தாஸ் தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக், செய்யூர் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

சென்னையில் டிட்வா புயல் கொட்டித் தீர்த்த தொடர் மழை!

தண்ணீர் உடனுக்குடன் வடிந்து, சென்னை மக்களை நிம்மதியடைய செய்தது!

முதல்வரின் மேலாண்மைக்கு சான்று – பொன்குமார் பாராட்டு!

சென்னை, டிச. 6 - தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளாகள் கட்சி நிறுவனத் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டிட்வா புயல் காரணமாக தொடர்ச்சியாக கனமழை பெய்தும் ஒரு சொட்டு தண்ணீர் கூட சென்னை மாநகர சாலைகளில் தொடர்ந்து நீடிக்காமல், உடனுக்குடன் வடிந்து, மக்களுக்கு எந்தவிதத் தொந்தரவும் தராத நிலைக்கு முதலமைச்சருடைய மேலாண்மைக்கும் அரசின் செயல்பாட்டிற்குமான சான்றாகும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைவதற்கு முன்பு ஓரிரு நாள் மழை பெய்தாலும் பல நாட்கள் தண்ணீர் வடியாமல், மக்கள் படகுகளில் செல்லக்கூடிய அவலத்தை எல்லாம் பார்த்த சென்னை மாநகரம், தற்போது தொடர் மழை பெய்தும் மழைநீர் வடிவதில் எந்த பிரச்சனையும் இல்லாத நிலை கண்டு ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடைகின்றனர். இதற்கு காரணம் முதலமைச்சரின் மேலாண்மையின் கீழ் அரசு நிர்வாகம் எடுத்த தொடர் நடவடிக்கையேயாகும்.

இந்த டிட்வா புயல் மற்றும் தொடர் மழையின் காரணமாக ஒரு சில, மிக தாழ்வான இடங்களில் நின்ற தண்ணீர் கூட மாநகராட்சி நிர்வாகம் மின்னல் வேகத்தில் ராட்ச மின் மோட்டாரை கொண்டு அந்த தண்ணீரை அகற்றியது மிகுந்த பாராட்டுதலுக்குரியதாகும். மரங்கள் விழுந்தால் அடுத்த ஓரிரு மணி நேரத்தில் அது அகற்றப்பட்டது. மின்சாரம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இப்படி இந்தத் தொடர் மழையால் சென்னை மாநகர மக்களுக்கு எந்த பிரச்சனையும் ஏற்படாமல் மிகச் சிறப்பாக மேலாண்மை செய்த அரசு, சென்னை மாநகராட்சிக்கு சென்னை வாழ் மக்கள் பாராட்டுதலைத் தெரிவித்து வருகின்றனர்.

இப்படி பேரிடர் கால நிவாரண பணிகளை திட்டமிட்டு மேற்கொண்டு அதில் வெற்றி கண்டுள்ள முதலமைச்சரை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி பாராட்டுகிறது.

இவ்வாறு அவா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அம்ருத் 2.0–ன் தற்போதைய நிலை என்ன?

கள்ளக்குறிச்சி தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நகரங்கள் எண்ணிக்கை எவ்வளவு?

நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 6- கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே .மலையரசன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டில் அம்ருத் 2.0 -ன் தற்போதைய நிலை, குறிப்பாக கள்ளக்குறிச்சி மக்களவைத் தொகுதியில் அனுமதிக்கப்பட்ட நகரங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மேற்கூறிய திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி எவ்வளவு?

நீர் வழங்கல், கழிவுநீர், வடிகால், பசுமையான இடங்கள் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து போன்ற முடிக்கப்பட்ட மற்றும் செயல்படுத்தப்படும் நகர்ப்புற உள்கட்டமைப்பு திட்டங்களின் விவரங்கள் என்ன?

திட்ட செயல்படுத்தலில் ஏதேனும் தாமதங்கள் அல்லது குறைபாடுகள் பதிவாகியுள்ளனவா, அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன?

ஒதுக்கப்பட்ட சமூகங்கள் உட்பட சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் மேம்பட்ட நகர்ப்புற வசதிகளை சமமாக அணுகுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.

படப்பை ஆ.மனோகரன் தலைமை! துணை முதல்வர் பிறந்த நாளையொட்டி

குன்றத்தூர் தெற்கில் சிலம்பத்தில் தகுதித் தேர்வு - கச்சை கட்டும் விழா!

அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, டிச.6- தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.முக மற்றும் பிரபஞ்சம் தற்காப்புக் கலைக்கழகம் இணைந்து நடத்தும் சிலம்பத்தில் தகுதித் தேர்வு மற்றும் கச்சை கட்டும் விழா நாளை - (7.12.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் தில்லை மஹால், படப்பை, சாலமங்கலத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர். படப்பை. ஆ.மனோகரன் தலைமையில் நடைபெறுகிறது.

இப்போட்டியை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன் துவக்கி வைக்கிறார்.

இதில் திருப்பெரும்பூதூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜி. பாஸ்கர்சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி, மனோகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப.ரா ம.மூர்த்தி, குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், எல்.டி.ஆர். இளைய கட்டபொம்மன், டாக்டர் சுதாகரன், ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வ.நந்த கோபால், சி.பார்த்தசாரதி, மூ. ராஜேந்திரன, எஸ்.கர்ணன், திருமதி.குமுதா சுமன் டி.லோக நாதன், த.ஏழுமலை என்.வாசு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகம் அருகில் 51 சென்ட் பரப்பளவில் 7.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகராட்சி மேல்நிலைப் பள்ளி கட்டிடம் கட்டுமானப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆய்வு மேற்கொண்டார். அருகில் திருவள்ளூர் நகர மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன் உள்பட அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.